RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.54392/ijot2443

# மதுரைக்காஞ்சியில் கூத்தும் கலைஞர் போற்றலும்

கா. சந்தானலெட்சுமி [அ] *

[அ] தமிழ்த்துறை, மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரி, சிவகங்கை, இந்தியா

# Koothu and Kalaignar Appreciation in Madurai Kanchi

K. Santhanalakshmi [a, *]

[a] Department of Tamil, Rajadurai Singam Govt Art's College, Sivagangai, India.

*Corresponding author Email: lakshmisanthana617@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2443

Received: 08-03-2024; Revised: 26-10-2024; Accepted: 07-11-2024; Published: 19-11-2024

Check for updates

**Abstract:** The history of Tamil Nadu Koothu dates back to B.C. From the Sangam literature onwards information about the types of koothus has been recorded here and there. In Silappathikaram, there is a special classification of koothus. Madurai Kanchi is a beautiful collection of beautiful events in Madurai. Madurai Kanchi is a beacon of ancient people's life. Madurai Kanchi is a great literature that portrays Madurai from a multifaceted point of view. This article seeks to look at the occurrence of koothu and the appreciation of artists from a descriptive and sociological approach.

**Keywords:** Koothu, Kalaignar, Madurai Kanchi, Tamil literature

## முன்னுரை

மதுரையின் எழில்மிகு நிகழ்வுகளின் அழகுபெறு தொகுப்பு மதுரைக்காஞ்சி ஆகும். பண்டைய கால மக்கள் வாழ்வியலின் ஒளிகாட்டியாக உருப்பெருக்கியாக மதுரைக்காஞ்சி திகழ்கிறது. பன்முகப் பார்வையில் மதுரையைப் படம் பிடித்துக் காட்டும் மாபெரும் இலக்கியமாக மதுரைக்காஞ்சி உள்ளது. கூத்துக்களின் நிகழ்வும், கலைஞர்களைப் போற்றுதலையும் விளக்கமுறை மற்றும் சமூகவியல் அணுகுமுறையில் இக்கட்டுரை காண விழைகிறது.

## மதுரைக்காஞ்சியில் கூத்தின் வகைகள்

தமிழகக் கூத்தின் வரலாறு கி.முவிலிருந்து தொடங்குகிறது. சங்க இலக்கியம் தொட்டு கூத்துக்களின் வகைகள் பற்றிய செய்திகள் ஆங்காங்கே பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காண முடிகிறது (Rasamanikanar, 1980). சிலப்பதிகாரத்தில் சிறப்பான முறையில் கூத்துக்களின் வகைப்பாடு அமைகிறது.

'இசையும் கூத்தும் பழந்தமிழ் நாட்டில் உயர்நிலை

எய்தின பாட்டுப் பாடினேன் பாணர், கூத்து

ஆடினோர் கூத்தர்' எனப்பட்டனர்.

ஆண்கள், பெண்கள் இருவரும் இணைந்து ஆடிய கூத்துக்களும் உண்டு. பெண்கள் மட்டுமே ஆடிய கூத்துக்களும் உண்டென்பதை மதுரைக்காஞ்சி உணர்த்துகிறது.

'சங்ககாலப் பெண்கள் குரவைக்கூத்து ஆய்ச்சியர் குரவை, துணங்கை போன்ற கூத்து வகைகளையும் பரதநாட்டியம் போன்ற நாட்டிய வகைகளையும் நன்கு அறிந்திருந்தனர் (Vasanthi, 2014). குறிஞ்சி நில மக்கள் முருகனைப் புகழ்ந்து ஆடிய கூத்து குன்றக் குரவை என்றும் முல்லை

நில மக்கள் மாயோனை புகழ்ந்து ஆடிய கூத்து ஆய்ச்சியர் குரவை என்றும் பெயர் பெற்றன. மகளிர் ஒருவர் ஒருவரைத் தழுவிக் கொண்டு ஆடிய கூத்து துணங்கை எனப்பட்டது. (மகளிர் தழீஇய துணங்கை தானும்). இதனால் வாழுகின்ற நிலங்களுக்கு ஏற்ப ஆடுகின்ற கூத்துக்களும் மாறியதைக் காண முடிகிறது.

## துணங்கைக் கூத்து

பெண்கள் இக்கூத்தினை ஆடியுள்ளனர். பெண்களில் குலமகளிர், பேய்மகளிர், கொண்டிமகளிர், பரத்தையர் என்றான வகைப்பாட்டினை மதுரைக்காஞ்சி வெளிப்படுத்துகிறது. மக்கள் வாழ்வியலானது பொருளாதார அடிப்படை மற்றும் பிற அடிப்படைகளில் மாறுபட்டாலும் கலைகளின் ரசனை, பகிர்வு என்று வரும் பொழுது அனைவருக்கும் பொதுவானதாக அமைவதை மதுரைக்காஞ்சி வாயிலாக அறியமுடிகிறது (Shanmuga Selva Ganapathi & Gnanambikai Kulendran, 2018). பொதுவியல் கூத்து வேத்தியல் கூத்து என்பன பொருளாதார அடிப்படையில் அமைந்த கூத்து வகைகள் ஆகும்.

மன்னனுக்கு எனத்தனியாக ஆடப்பட்ட கூத்துக்கள் மக்களுக்கெனத் தனியாக ஆடப்பட்ட கூத்து வகைகள் என்பன அரசன் முதல் ஆண்டி வரை கலைக்கு கட்டுப்பட்டவர்கள் என்பதைக் காட்டுகிறது.

இதில் மதுரைக்காஞ்சியில் துணங்கைக் கூத்துளு குரவைக் கூத்து, யாழிசைக்கு ஏற்ப ஆடப்பட்ட கூத்து என்பன மட்டுமே இடம் பெறுவதைக் காண முடிகிறது.

ஒளியுடைய வளையல்கள் அணிந்த மடப்பத்தெயுடைய பெண்கள் துணங்கைக் கூத்தினையும் அழகிய தானத்தையுடைய குரவைக் கூத்தினையும் மறக்கின்ற நிலை போர்ச்சூழலால் ஏற்படுகிறது என்பதனை

“இலங்குவளை மடமங்கையர்

ஆம்சீர்த் தழு உ மறப்ப துணங்கை

என மதுரைக்காஞ்சி உணர்த்துகிறது (Nagarasan, 2007).

இக்கூத்துக்களை பெண்கள் மறக்கின்ற நிலையில் அக்கூத்து பேய் மகளிருக்கு உரியதாகின்றது.

“ஆ சேர்ந்த வழி மா சேர்ப்ப

ஊர் இருந்த வழி பாழ் ஆக”

என்ற சூழலில் பேய் மகளிரின் துணங்கை கூத்தின் முழக்கமானது எங்கும் ஒலிக்கின்றது (Nagarasan, 2007). அதற்கு தலையில்லா பிணங்கள் எழுந்து ஆடுகின்றதை மதுரைக்காஞ்சி காட்டுகிறது. போர்க்கால சூழ்நிலையானது கலைஞர்களையும் அன்றாட மக்களின் வாழ்வியலோடு இணைந்த கலைக்கூறினையும் பாதிப்பதை அறிய முடிகிறது. மக்கள் ஆடக்கூடிய துணங்கைக் கூத்தினை பேய்மகளிர் ஆடுகின்றனர் என்பது அந்நாட்டின் அவலநிலையைக் காட்டுகிறது.

அமைதியும் வளமுமே கலையின் பிறப்பிடமாக நிகழிடமாக அமையும் கலை என்பது நாட்டின் வளமையின் அடையாளமாக உள்ளதை அறிய முடிகிறது. பெரும்பாலான மக்களால் பல்வேறு சூழல்களில் துணங்கைக் கூத்து ஆடப்பட்டுள்ளது. 'துணங்கை என்பது கூத்து வகைகளுள் ஒன்று. அது முடங்கிய இரு கைகளையும் விலாப்புடைகளில் ஒற்றி அடித்துக் கொண்டு அசைந்தாடும் ஒருவகைக் கூத்து. மகளிர் விழாக்காலங்களில் துணங்கைக் கூத்தாடுவர் ஆடவர் அம்மகளிருக்கு முதற்கை கொடுத்தல் வழக்கம்.'

விழாக்களின் போதும் மகிழ்ச்சியின் வெளிப்பாடாகவும் துணங்கைக் கூத்து நிகழ்ந்ததை மதுரைக்காஞ்சி பாடல் வரிகள் (157-160) மூலம் அறியமுடிகிறது. ஆடலும் பாடலும் மக்கள்; வாழ்வியலின் அங்கமாவதை உணர முடிகிறது (Nagarasan, 2007).

துணங்கை கூத்து நிகழும் மணம் கமழும் சேரிகளின் இருப்பிடமாக மதுரை திகழ்ந்ததையும் மதுரைக்காஞ்சியின்

"முழவு இமிழும் அகல் ஆங்கன்

விழவு நின்ற வியல் மறுகின்

துணங்கை அம்தழூஉவின் மணம் கமழ்சேரி"

என்ற வரிகள் சுட்டுகின்றன (Nagarasan, 2007). துணங்கைக் கூத்தும், குரவைக்கூத்தும் நிகழ்கின்ற மணம் கமழ்கின்ற பரத்தையர் தெருக்களைக் கொண்ட மதுரை என்பதுஞூ மதுரையின் செல்வச் செழிப்பினைக் காட்டுகிறது. வயலும் வயல் சார்ந்த மருதநிலப் பகுதியிலே ஊடல் உரிப்பொருளாகிறது. அதற்கு பரத்தையர் ஒழுக்கமே காரணமாகிறது. இங்கும் பாண்டிய மன்னனின் வெற்றியும் அதனால் பெற்ற செல்வத்தின் செழிப்பும் ஆடவரை பரத்தையர் பால் நாட்டம் கொள்ள வைப்பதை நயமுற மாங்குடி கிழார் உணர்த்தியுள்ளார்.

பாண்டிய மன்னனே உனது போரும் உனது வெற்றியும் உன்நாட்டு மக்களிடையே எவ்வித வாழ்வியலை உண்டாக்கி உள்ளது என்பதை நீயே உணர்ந்து கொள்வாயாக என்பதற்காகவே மணம்கமழ் பரத்தையர்சேரிகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார். மதுரைக்காஞ்சி போன்றே பிற சங்க இலக்கியங்களிலும் துணங்கைக்கூத்து பற்றிய குறிப்பு மக்களின் மகிழ்வாக வெளிப்படுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது ஆகும்.

## குரவைக்கூத்து

முள்ளிச் செடிகள் உடைய மணல் நிறைந்த கடற்கரையில் இருக்கும் பரதவ மகளிர் குரவை ஆடும் ஒலி ஒலிப்பதை,

"மணிப் பூ முண்டகத்து மணல் மலிகானல்

பரதவர் மகளிர் குரவையொடு ஒலிப்ப"

என மாங்குடி மருதனார் வருணிக்கிறார் (Nagarasan, 2007). 'குரவையாடுதல் இருபாலருக்கும் உரியது எனினும் குரவை என்பது எழுவர் மங்கையர் செந்நிலை மண்டலக் கடகக் கைகோத்து அந்நிலைக் கொப்ப நின்று ஆடும் கூத்தாகும்'. கார் காலத்தில் குறிஞ்சி மலர்களைச் சூடி கடம்ப மரத்தில் உறையும் புகழ்ச்சிமிக்க முருகன் வழிபட்டு மகளிர் தம்முள் கைகோர்த்து மன்றங்கள் தோறும் குரவைக் கூத்தாடியதை மதுரைக்காஞ்சியின்,

"கார்மலர்க் குறிஞ்சி சூடி கடம்பின்

சீர்மிகு நெடுவேள் போணித் தழூஉப்

பிணையூஉ

மன்று தொறும் நின்ற குரவை" (Nagarasan, 2007)

"அருங்கடி வேலன் முருதொடு வளைஇ

அரிக்கூடு இன்இயம் கறங்க"

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன (Nagarasan, 2007). இசைக்கருவிகள் முழக்கத்தோடு முருகனை முன்வைத்து குரவைக் கூத்து நிகழ்த்தப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

விழாக்காலங்களில் ஆடும் கூத்தர்கள் இரண்டாவது சாமத்தில் துயின்றதை

"விழவின் ஆடும் வயிரியர் மடிய" (மதுரைக்காஞ்சி 628)

என்ற பாடல் வரி உணர்த்தும். முதல் யாமத்தில் யாழின் இசைக்கு ஏற்ப 'கெண்டி மகளிர்' கூத்தாடியுள்ளனர். (Nagarasan, 2007) கண்டவர்களின் நெஞ்சை வருத்தி அவர்களின் பொருள்களை கொள்ளையடிக்கும் மகளிரே கெண்டி மகளிர்' எனப்பட்டனர். யாழின் இசைக்கு ஏற்பவும் முழவின் ஓசைக்கு ஏற்பவும் கூத்தாடியதை

'வாவை மகளிர் மான கண்டோர்

நெஞ்சு நடுக்குறூஉக் கெண்டி மகளி

யாழ் நல் யாழ் நாப்பண் நின்ற

முழவின் மகிழ்ந்தனர் ஆடி'

என்ற மதுரைக்காஞ்சியின் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன (Nagarasan, 2007).

## கலைஞர்களைப் போற்றுதல்

வருக என பெரிய சுற்றத்தாரை உடைய பரிசிலர்களை பாண்டிய மன்னன் வரவேற்று அவர்களுக்கு தாமரை வடிவிலான உறுப்புக்களைக் கொண்ட தேர்களையும் களிற்று யானைகளையும் அளித்தான் என்பதை மதுரைக்காஞ்சி கூறுகிறது.

“பயன்அறவு அறியா வளம்கெழு திருநகர்

நரம்பின் முரலும் நயம்வரு முரற்சி

விறலியர் வறுங்கைக் குநற்தொடி செறிப்பப்

பாண் உவப்பக் களிறு பலதரீஇ

கலந்தோர் உவப்ப எயில் பல கடைஇ”

என்பதிலிருந்து மண்ணின் கொடைச்சிறப்பினையும் அறியலாம் (Nagarasan, 2007). விடியற்காலையில் வரும் பாணர்களுக்கு குதிரையையும் தேரினையும் மன்னன் தந்ததாக மதுரைக்காஞ்சி பதிவு செய்கிறது.

'செல்வத்து பயனே ஈதல்'

என்ற கூற்று இங்கு மெய்யாகிறது. போர் வெற்றியின் செல்வமானது கலைஞர் கூட்டத்தின் வாழ்வியலலுக்கான அடிப்படை பொருளாதாரத்தை தருவதாக உள்ளதென்பதை உய்த்துரை முடிகிறது.

யானைக் கூட்டத்தையே கலைஞர் கூட்டத்திற்குத் தந்துள்ளான் பாண்டிய மன்னன். பாணருக்கும் விறலியருக்கும் பொன்னாலாகிய தாமரை மலர்களைத் தந்து சிறப்பு செய்துள்ளனர் அக்கால மன்னர்கள் என்பதை மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது (Nagarasan, 2007).

“இலங்கு மருப்பின் களிறு கொடுத்தும்

பொலந்தாமரைப் பூச் சூட்டியும்

நலம் சான்ற கலம் சிதறும்

பல் குட்டு வெல் கோவே”

என்பதிலிருந்து கலைஞர்களின் மதிப்பும் அவர்களுக்கான சமூக பொறுப்பும் புலனாகிறது. அரசன் முதல் ஆண்டி வரை அனைவரின் மனநிறைவிற்கான பணியைச் செய்தவர்கள் கலைஞர்கள் என்பதால் அவர்களைச் சிறப்பிப்பதனை தங்கள் பேறாக மன்னர்கள் கருதி உள்ளதை அறிய முடிகிறது.

“வரையா வாயில் செறாஅது இருந்து

பாணர் வருக பாட்டியர் வருக

யாணர் புலவரோடு வயிரியர் வருக என

இருங்கிளை புரக்கும் இரவலர்க்கு எல்லாம்

கொடுஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசிட”

என மதுரைக்காஞ்சியின் இறுதிப்பகுதியில் பாணர் பாடியதை சிறப்பிக்கும் தன்மையினை பாண்டிய மன்னனுக்கு மாங்குடி மருதனார் அறிவுறுத்துகிறார் (Nagarasan, 2007).

கலையோடு இசையோடு வள்ளண்மை வாழ்வோடு நின் வாழ்நாள்கள் கழிய வேண்டும் என்ற அறிவுறுத்தலோடு மதுரைக்காஞ்சியை மாங்குடி மருதனார் நிறைவு செய்கிறார். கலைக்கும் கலைஞர்களுக்கும் இருந்த நற்பேறு தெரிய வருகிறது. மேலும் அக்காலச் சமூகத்தின் மக்கள் ரசனையோடு மன்னனின் நுண்கலைத் திறனும் வெளிப்படுகிறது.

'கற்றாரை கற்றாரே காமுறுவர்' என்பதனாலே கலைஞானம், கலை அவா உடையவர்களே கலைஞர்களைப் போற்றுவார்கள், சிறப்பிப்பார்கள் என்பது உறுதியாகிறது.

## முடிவுரை

அமைதியான வாழ்வியல் அழகான வாழ்வியலுக்கு வழிகாட்டும் என்பதற்கு மதுரைக்காஞ்சியில் வருணிக்கப்படும் கூத்துக்களும் கலைஞர் பற்றிய தரவுகளும் சான்றாக அமைகின்றன. வாழ்வியல் சூழல் மாறும்பொழுது கலைஞர்களின் வாழ்வில் ஏற்படும் பாதிப்புக்களும் வரலாற்றில் என்றும் பதிவு செய்யப்பட வேண்டியவையாகும் என்பதை மதுரைக்காஞ்சியின் பாடல்வரிகள் புலப்படுத்துகின்றன. மக்களின் அன்றாட வாழ்வியலின் ஒரு அங்கமாக கூத்தும் இசையும் கலைஞர்களைப் போற்றுதலும் அமைந்திருந்ததை இவ்வாய்வு உறுதி செய்கிறது.

## References


Nagarasan, V. (2007) Maduraikanchi, New Century Book House, Chennai, India.

Rasamanikanar, M. (1980) Tamilaga Kalaikal, Paari Nilayam, Chennai, India

Shanmuga Selva Ganapathi, Gnanambikai Kulendran, (2018) Tamilaga Kalaikal, Tamil Virtual Academy, Chennai, India

Vasanthi, C. (2014) Tamilaga Koyir Kalaikal, Tamil Nadu State Department of Archaeology, Chennai, India


## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2024. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License


**Cite this Article**

K. Santhanalakshmi, Koothu and Kalaignar Appreciation in Madurai Kanchi, Indian Journal of Tamil, 5(4), (2024) 13-17. https://doi.org/10.54392/ijot2443